கிருஷ்ணகிரி அருகே போலுப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழுத் தலைவர்கள் மாநாடு நடந்தது. இதில், மேலாண்மை குழுவினருக்கு கேடயம் மற்றும் பரிசை மவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மகேஸ்வரி வழங்கினார்.

கிருஷ்ணகிரி அருகே போலுப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு தலைவர்கள் மாநாடு

● கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி அருகே போலுப் பள்ளியில் உள்ள அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், பள்ளிக் கல்வித்துறை மற்றும் ஒருங் கிணைந்த பள்ளிக் கல்வி சார்பில், பள்ளி மேலாண்மை குழுத் தலை வர்களுக்கான மாநாடு நடந்தது.

மாநாட்டுக்கு, ஆட்சியர் கே.எம். சரயு தலைமை வகித்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மகேஸ்வரி பங்கேற்று பேசினார். மாநாட்டில், சிறப்பாக பணிபுரிந்த 30 மேலாண்மை குழுத் தலைவர் களுக்கு ஆட்சியர், பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார். இதேபோல மற்ற பள்ளி மேலாண்மை குழுத் தலைவர்களுக்குப் பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயத்தை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வழங்கினார்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவி திட்ட அலுவலர் வடிவேலு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் வெங்கடேசன், மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) மணிமேகலை (கிருஷ்ணகிரி), கோவிந்தன் (ஓசூர்), மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க நிலை) ஆனந்தன் (கிருஷ்ணகிரி), முனிராஜ் (ஓசூர்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கஞ்சாவால் இளம் குற்றவாளிகள் உருவாகி உள்ளனர்

● அதிமுக துணை பொதுச்செயலாளர் குற்றச்சாட்டு

● கிருஷ்ணகிரி / ஓசூர்/தருமபுரி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கஞ்சாவால் இளம் குற்றவாளி கள் உருவாகி உள்ளனர் என அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி குற்றம்சாட்டினார்.

திமுக அரசைக் கண்டித்து, ஓசூர் மின்வாரிய அலு வலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட் டத்துக்கு, அதிமுக மேற்கு மாவட்டச் செயலாளர் பாலகிருஷ்ண ரெட்டி தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, கிழக்கு மாவட்டச் செயலாளர் அசோக்குமார் எம்எல்ஏ தலைமை வகித்தார்.

இரு இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களிலும் பங் கேற்று, அதிமுக துணைப் பொதுச்செயலாளர் முனுசாமி எம்எல்ஏ பேசியதாவது:

கடந்த, 3 ஆண்டு கால திமுக ஆட்சி செயல் இழந்த அரசாக உள்ளது. சட்டம் ஒழுங்கு முடங்கி சீர்கெட்டுள்ளது. திமுக எம்எல்ஏ மகன், மருமகள் வீட்டில் படிக்கும் மாணவியை வேலைக்கு அமர்த்தி வன்கொடுமை செய்துள்ளனர்.

ஓசூரில் கடந்த இரு மாதங் களில் 20-க்கும் மேற்பட்டோர் சட்டவிரோத வருமானத் துக்காக ஆதாய கொலை கள் நடந்துள்ளன. மாவட்டம் முழுவதும் பரவியுள்ள கஞ்சாவால் இளம் குற்ற வாளிகள் உருவாகியுள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கே.பி.முனுசாமி கூறியதாவது:

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது தந்தை கருணாநிதியின் பெயர் மற்றும் சிலையை எங்கெல்லாம் வைக்க முடியும் எனப் பார்த்து அதைச் செய் கிறார். அரசியலில் தங்களை எதிர்த்தவர்கள் பெயர் எங்கும் இருக்கக் கூடாது என நினைக் கிறார். வரும் 2026 சட்டப் பேரவை தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்போது, கருணாநிதி என்ற பெயரே இல்லாமல் செய்து விடுவோம், என்றார்.

ஆர்ப்பாட்டங்களில், தமிழ் செல்வம் எம்எல்ஏ, ஓசூர் மண்டல தலைவர் ஜெயபிரகாஷ், ஓசூர் பகுதிச் செயலாளர் ராஜு, கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் கேசவன், ஜெயலலிதா பேரவை மாவட்டச் செயலாளர் கேஆர்சி தங்கமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரியில் ஆர்ப்பாட்டம்

இதுபோல, தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் எம்எல்ஏ தலைமை வகித்தார். தருமபுரி நகரச் செயலாளர் பூக்கடை ரவி வரவேற்றார்.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். தமிழகத்தில் போதைப் பொருட்கள் நடமாட்டத்தை முழுமை யாக தடுக்க வேண்டும். பட்டியலின மாணவி மீது திமுக எம்எல்ஏ குடும்பத்தார் கொடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத திமுக அரசை அதிமுக வன்மையாகக் கண்டிக்கிறது என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

அதிமுக அமைப்புச் செயலாளர் சிங்காரம், மாநில விவசாய பிரிவு தலைவர் டி.ஆர்.அன்பழகன், மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல், எம்எல்ஏ-க்கள் கோவிந்தசாமி, சம்பத்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திமுக அரசைக் கண்டித்து, கிருஷ்ணகிரியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ பேசினார். (அடுத்தபடம்) தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில், முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் எம்எல்ஏ தலைமையில் அதிமுக-வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை - 600 025.
கலைஞர் 100 1924 - 2023

அண்ணா பல்கலைக்கழக (Department of Computer Science and Engineering) துறைக்கு, இராமானுஜன் கணினி மையம் வாயிலாக கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்கி நிறுவ மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் இரு ஆவண முறையில் வரவேற்கப்படுகின்றன.

Sl.No.	Tender Ref. No.	Name of the equipment / item	Department/Centre	Qty.	Approx. Cost Rs.
1.	04/CPO/RCC/WS/DCSE/2024	Workstation	Department of Computer Science and Engineering	17 Nos.	71,00,000/-

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in என்ற வலைதளத்தில் பதிவு செய்து 02.02.2024 காலை 11.00 மணியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்த ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை 19.02.2024 பிற்பகல் 03.00 மணிக்குள் மேற்கண்ட வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். வலைதளத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20.02.2024 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு திறக்கப்படும்.

ஒப்பந்த (மற்ற) நிபந்தனை போன்ற விவரங்களும் மற்றும் இனி வருங்காலத்தில் தேவைப்படும் திருத்தங்களும் மேற்கண்டவலைதளத்தில் மட்டுமே அறிவிக்கப்படும்.

செ.ம.தொ.இ.602/ஒப்பந்தப்புள்ளி/2024 — பதிவாளர் (பொ)

நிலுவை ஊதியம் வழங்க வலியுறுத்தி உள்ளாட்சி பணியாளர் சங்கத்தினர் மனு

● தருமபுரி

நிலுவை ஊதியத்தை விரைந்து வழங்க வலியுறுத்தி தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநரிடம் உள்ளாட்சிப் பணியாளர் சங்கம் சார்பில் நேற்று மனு அளிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், நல்லம்பள்ளி ஒன்றிய ஆணையர் ஆகியோரிடம் ஏஐடியுசி உள்ளாட்சி பணியாளர் சங்கம் சார்பில் மாவட்டத் தலைவர் மனோகரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் மணி ஆகியோர் தலைமையில் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தினக்கூலி அடிப் படையில் பணியாற்றும் தூய்மைக் காவலர்கள், தூய்மைப் பணி யாளர்களுக்கு கடந்த 6 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. குறிப்பாக, நல்லம்பள்ளி ஒன்றியம் மானியத அள்ளி, மிட்டாரெட்டி அள்ளி ஊராட்சிகளிலும், கடத்தூர் ஒன்றியம் கேத்துரெட்டிப்பட்டி, தாளநத்தம் ஊராட்சிகளிலும் தினக்கூலி அடிபடையில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்களுக்கு கடந்த 6 மாதமாக ஊதியம் வழங்கப்படவில்லை.

இதனால் அந்த தொழிலாளர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே, அவர்களுக்கு விரைந்து ஊதியத்தை வழங்க வேண்டும். 7-வது ஊதியக் குழு பரிந்துரைப்படி ஊதிய உயர்வு மற்றும் நிலுவை தொகையையும் வழங்க வேண்டும், என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் மனு அளிக்க வந்த ஏஐடியுசி உள்ளாட்சிப் பணியாளர் சங்கத்தினர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
repsalem@hindutamil.co.in

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் கலைஞர் 100 1924 - 2023
யூனிட் – 1 : காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்)
யூனிட் – 2 : மொண்டிப்பட்டி – 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி : 04332 – 261600.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
232413 006712	யூகலிப்டஸ் மற்றும் இதர மரக்கட்டைகளை இறக்குதல், அடுக்குதல், சேமித்து உட்செலுத்துதல் மற்றும் மர சில்லுகளை கன்வேயர் மூலம் உட்செலுத்துதல்.	16.02.2024
232433 000462	TNPL சிமெண்ட் ஆலையில் CCR Operator மற்றும் Yard mate- க்கு ஆட்களை வழங்குதல்.	17.02.2024
232413 006833	TAFCORN மற்றும் பண்ணைக்காடுகளில் பணிபுரிவதற்கு ஆட்களை வழங்குதல்.	17.02.2024
232413 006630	மை நீக்கி காகிதக் கூழ் தயாரிக்கும் ஆலையின் இயக்கத்திற்கு ஆட்களை வழங்குதல் மற்றும் திடக்கழிவுகளைப் பொதியிட்டு (Baling) வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லும் பணி செய்தல்.	16.02.2024
232423 004240	திருச்சி TNPL அலகு-II ல் எலக்ட்ரிக்கல் டிபார்க்கர் இயந்திரம் மூலம் ஒப்பந்ததாரர் சொந்த கிராப்பரை பயன்படுத்தி இயந்திரமயமாக்கப்பட்ட டிபார்க்கிங் செய்தல் மற்றும் சிப்பர்களுக்கு கொண்டு செல்லும் பணிகளை மேற்கொள்ளுதல்.	16.02.2024
232423 004241	திருச்சி TNPL அலகு-II ல் உள்ள சிப்பர் ஹவுஸில் உட் சைலோவிலிருந்து செயின் ரீகிளைமருக்கு மரக்கட்டை துண்டுகளை எடுத்துச் செல்லுதல் மற்றும் கையாளுதல்	16.02.2024
232423 004242	திருச்சி TNPL அலகு-II ல் மரக்கன்றுகள், அலங்கார செடிகளை உற்பத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் மேலும் அலகு-ல் குடியிருப்பில் உள்ள தோட்ட நிலப்பரப்பினை பராமரித்தல்.	16.02.2024
இமெயில்	232413006712 ; 6833; 6630 & 232433000462 - tech_services@tnpl.co.in 232423004240 ; 4241 & 4242 - tos.u2@tnpl.co.in	

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒப்பந்தப்புள்ளி கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/561/ஒப்பந்தப்புள்ளி/2024 — நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

MTC மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது கலைஞர் 100 1924 - 2023
பல்லவன் இல்லம், அண்ணா சாலை, சென்னை - 600 002.
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், பேருந்துகளில் விளம்பரம் செய்வதற்கு உரிமம் வழங்குவதற்காக தகுதிவாய்ந்த கீழ்க்காணும் ஆவண அத்தாட்சி சமர்ப்பிக்கும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	உரிமம் விவரம்	முன்வைப்புத் தொகை ரூ.	தகுதியுள்ள ஒப்பந்ததாரர்
1	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 265 பேருந்துகளின் பயணிகளின் வெளிநோக்கு கண்ணாடிகளில் (ஒரு பக்க பார்வை) மற்றும் பேருந்துகளில் முழு பக்க வாட்டு பகுதிகளில் (பாடி ஷீட்) பேனலின் வலது & இடது பக்கத்தில் பேருந்து பாடி ஜன்னல்களுக்கு கீழே உள்ள இடத்திலும் மற்றும் பேருந்துகளின் பின்புறம் உட்பட, விளம்பரம் செய்தல். (TND,TWD & VPD)	ரூ.2,91,500	பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் விளம்பர துறையில் குறைந்த பட்சம் மூன்று வருடம் அனுபவம்.
2	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 250 பேருந்துகளின் பயணிகளின் வெளிநோக்கு கண்ணாடிகளில் (ஒரு பக்க பார்வை) மற்றும் பேருந்துகளில் முழு பக்க வாட்டு பகுதிகளில் (பாடி ஷீட்) பேனலின் வலது & இடது பக்கத்தில் பேருந்து பாடி ஜன்னல்களுக்கு கீழே உள்ள இடத்திலும் மற்றும் பேருந்துகளின் பின்புறம் உட்பட, விளம்பரம் செய்தல். (AYD,PAD & END)	ரூ.2,86,000	
3	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 250 பேருந்துகளின் பயணிகளின் வெளிநோக்கு கண்ணாடிகளில் (ஒரு பக்க பார்வை) மற்றும் பேருந்துகளில் முழு பக்க வாட்டு பகுதிகளில் (பாடி ஷீட்) பேனலின் வலது & இடது பக்கத்தில் பேருந்து பாடி ஜன்னல்களுக்கு கீழே உள்ள இடத்திலும் மற்றும் பேருந்துகளின் பின்புறம் உட்பட, விளம்பரம் செய்தல். (TRD,CWD & ALD)	ரூ.2,75,000	
4	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 315 பேருந்துகளின் பயணிகளின் வெளிநோக்கு கண்ணாடிகளில் (ஒரு பக்க பார்வை) மற்றும் பேருந்துகளில் முழு பக்க வாட்டு பகுதிகளில் (பாடி ஷீட்) பேனலின் வலது & இடது பக்கத்தில் பேருந்து பாடி ஜன்னல்களுக்கு கீழே உள்ள இடத்திலும் மற்றும் பேருந்துகளின் பின்புறம் உட்பட, விளம்பரம் செய்தல். (CD,PD & KBD)	ரூ.3,46,500	
5	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 300 பேருந்துகளின் பயணிகளின் வெளிநோக்கு கண்ணாடிகளில் (ஒரு பக்க பார்வை) மற்றும் பேருந்துகளில் முழு பக்க வாட்டு பகுதிகளில் (பாடி ஷீட்) பேனலின் வலது & இடது பக்கத்தில் பேருந்து பாடி ஜன்னல்களுக்கு கீழே உள்ள இடத்திலும் மற்றும் பேருந்துகளின் பின்புறம் உட்பட, விளம்பரம் செய்தல். (AVD,ABD & VYD)	ரூ.3,30,000	
6	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 13 குளிர்சாதன பேருந்துகளில் மொத்த வெளிப்புற கூண்டு தகடு (பாடி ஷீட்) பேனலின் வலது மற்றும் இடது பக்கத்தில் விளம்பரம் செய்தல், மேலும் பேருந்துகளின் வெளிநோக்கு கண்ணாடிகளிலும் உள்ள இடத்தில் (ஒரு பக்க பார்வை) விளம்பரம் செய்தல். (ஜன்னல்கள் - சுமார் 2 அடி கூண்டு தகடுக்கு மேல் & முன்புற மற்றும் பின்புற காற்றுத்தடை கண்ணாடி நீங்கலாக. (CD,AND)	ரூ.35,750	
7	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 1000 பேருந்துகளில் (5 சம அளவுகளில்) பயணிகளின் இருக்கைக்கு பின்புறம் காலியாக உள்ள இடத்தில் விளம்பரம் செய்தல் (200 பேருந்துகள் /அளவு)	ரூ.15,400/– ஒவ்வொரு அளவிற்கும் தனியாக	பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் விளம்பர துறையில் குறைந்த பட்சம் மூன்று வருடம் அனுபவம்.
8	பல்வேறு பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் 2600 பேருந்துகளில் (13 சம அளவுகளில்) பயணிகளின் கைப்பிடி வசதி செய்து அதில் விளம்பரம் செய்தல். (200 பேருந்துகள் /அளவு)	ரூ.14,000/– ஒவ்வொரு அளவிற்கும் தனியாக	பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் விளம்பர துறையில் குறைந்த பட்சம் மூன்று வருடம் அனுபவம்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் EMD விவரம் தமிழ்நாடு அரசு மின் இணையதளமான https://tntenders.gov.in/nicgep/app பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை ஒப்பந்ததாரர்கள் பார்வையிட்டு உரிய ஆவணங்களை மேற்குறிப்பிட்ட மின் இணையதளத்தில் மட்டுமே பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சமர்ப்பிக்க துவங்கும் நாள் : 02.02.2024 காலை 11.00 மணி முதல்
ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சமர்ப்பிக்க இறுதி நாள் : 17.02.2024 - 12.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் தேதியும் நேரமும் : 17.02.2024 - 15.00 மணி

மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏதேனும் இருப்பின் அவ்விபரம் மேற்படி https://tntenders.gov.in/nicgep/app இணையதள முகவரியில் வெளியிடப்படும். ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் மேற்படி இணையதள முகவரியில் விபரத்தை அவ்வப்போது பார்த்துக்கொள்ளலாம்.

விண்ணப்ப படிவங்களை / ஒப்பந்தப்புள்ளிகளை எவ்வித காரணமும் விளக்கமும் இன்றி ஏற்றுக்கொள்ளவோ / நிராகரிக்கவோ மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

செ.ம.தொ.இ./609/ஒப்பந்தப்புள்ளி/2024 — மேலாண் இயக்குநர்

தருமபுரி, ஓசூர் உட்பட 14 கோட்டங்களை சேர்ந்த

வனத்துறையினருக்கு முண்டந்துறையில் பயிற்சி

● திருநெல்வேலி

தமிழகத்தில் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள 14 வனக்கோட்டங்களைச் சேர்ந்த வனச்சரக அலுவலர்கள் மற்றும் வனவர்களுக்கான நான்கு நாள் பயிற்சி திரு நெல்வேலி மாவட்டம் முண்டந் துறையிலுள்ள களப்பயிற்சி மையத்தில் தொடங்கியது.

சூழல் மேம்பாட்டுக் குழுக்கள் அமைத்து,மக்கள் பங்கேற்புடன் கூடிய வனப் பாதுகாப்பை முழுமையாக செயல்படுத்துவதற்காக, தமிழக தலைமை வனப்பாதுகாவலர் இ.அன்வர்தீன் உத்தரவின்படி இப்பயிற்சி நடைபெறுகிறது.

கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ள திண்டுக்கல், திருச்சி, நாமக்கல், ஈரோடு, சத்தியமங்கலம், ஹாசனூர், ஓசூர், தருமபுரி, சேலம், ஆத்தூர், திருப்பத்தூர், வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய, 14 வனக்கோட்டங்களைச் சேர்ந்த, 40 வனச்சரக அலு வலர்கள் மற்றும் வனவர்கள் பங்கேற்றுள்ளனர்.

பயிற்சியின் தொடக்க நிகழ்ச்சிக்கு களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் மாரிமுத்து தலைமை வகித்தார்.

ஓய்வுபெற்ற கூடுதல் முதன்மைதலைமைவனப்பாது காவலர் அ.வெங்கடேஷ், வரையாடுகள் திட்ட இயக்குநர் ம.கோ.கணேசன் உள்ளிட்டோர் தொடங்கி வைத்தனர். சூழல் மேம்பாட்டு அலுவலர் அ.அன்பு பேசினார்.

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக சூழல் மேம் பாட்டுத் திட்டத்தின் தொடக்கம் முதல் தற்போது வரையில் அடைந்துள்ள வளர்ச்சி, கிராம வனக்குழுக்களின் உறுப்பினர்கள் பெற்றுள்ள வாழ்வாதார மேம்பாடு போன்ற தலைப்புகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

மைலார் காணிக்குடியிருப்பு சூழல் மேம்பாட்டுக் குழுவில் நடத்தப்பட்ட கலந்துரை யாடல் கூட்டத்தில், குழு உறுப் பினர்களான பழங்குடியின மக்களால் இயற்கை முறை யில் உற்பத்தி செய்யப்பட்ட விளைப் பொருட்கள் மற்றும் அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், அதனை சந்தைப்படுத்தும் யுக்திகள் குறித்து விளக்கப் பட்டது.

கேரள மாநிலத்தில் அரசின் வழிகாட்டுதல்களுடன் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர் களால் சிறப்பாக செயல்படுத் தப்பட்டு வரும் 'குடும்பஸ்ரீ' எனும் திட்டம் குறித்து அதன் மேலாளர் அனிஸ்குமார் விளக்கினார்.

வனச்சரக அலுவலர்கள் மற்றும் வனவர்களுக்கான பயிற்சி முண்டந்துறையிலுள்ள களப்பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர் கள் ஆகியோர் எந்த சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

நகரில் நடப்பவை

தருமபுரி

- ஆண்டு விழா: டான் போஸ்கோ கல்லூரி, அதியமான் புறவழிச் சாலை, சோகத்தூர், தருமபுரி. காலை 10 மணி. சிறப்பு அழைப்பாளர்: பாதர் பெல்லார்மின் பெர்ணான்டோ.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)
பதிவு அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" எனும் அடிப்படையில் மின் ஏலத்தின் (e-auction) மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	30.01.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	45389420001167	1) திரு. ரிஷியல் M U, 2) திருமதி. ஷுகுப்தா B K	25.07.2023	21.10.2023	ரூ.27,75,906.01 (ரூபாய் இருபத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து ஆறு மற்றும் பைசா ஒன்று மட்டும்)	09.02.2024 நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.28,59,000/- (ரூபாய் இருபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்)	ரூ.2,85,900/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)	19.02.2024 @ மாலை 02.00 மணி	17.02.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், தலைமை அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

அடமான சொத்தின் விவரம்: கெம்பட்டி கிராமம், தேன்கனிகோட்டை தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் கீலமங்களம் சார் பதிவு மாவட்டம் மற்றும் கெம்பட்டி கிராமம் பஞ்சாயத்து எல்லைகள் மற்றும் தால்லி யூனியன் கவுன்சில். கெம்பட்டி கிராமம் சர்வே எண். 731, Dry Ext. Hec. 1.54.0, Asst. Rs.0.94np, தற்போது மேலும் துணை பிரிவு (1) சர்வே எண். 731/1, Dry. Ext. Hec. 0.95.5 (or) Ac. 2.36 cents, Asst. Rs.0.59np, (2) சர்வே எண். 731/2, Dry. Ext. Hec. 0.58.5 (or) Ac. 1.44 cents, Asst. Rs.0.35np. மேற்குறிப்பிட்ட இரண்டு சர்வே எண்கள் பரப்பு ஏக்கர் 3.80 சென்ட்ஸ். நிலங்கள் "ஆஷிர்வாத் அம்பாரா பேஸ்-3" என்ற பெயரில் ஒப்புதல் லேஅவுட்டாக மாற்றப்பட்டு பல வீட்டு சைட்டுகளாக பிரிக்கப்பட்டது, ஒப்புதல் வழங்கியது துணை இயக்குநர், நகரம் மற்றும் நாடு திட்டம் அங்கீகாரம், ஒப்புதல் எண். 16/2008, இதில் மனை எண்.54. பரப்பு 2289 சதுர அடி, மற்றும் பின்வரும் **எல்லைகள்: கிழக்கு:** சாலை, **மேற்கு:** சுற்றுச்சுவர், **வடக்கு:** மனை எண்.55, **தெற்கு:** மனை எண்.53. இந்த எல்லைகளின் அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 76.3 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் : 76.3 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 30.0 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் : 30.0 அடி. மொத்த ஏரியா - 2249 சதுர அடி (இரண்டாயிரத்து இருநூற்றி நாற்பத்தி ஒன்பது சதுர அடி) மற்றும் பொது உரிமைகள் உட்பட மற்றும் அனைத்து விற்பனை பத்திரத்தின்படி சைட்டுக்கு செல்லும் லேஅவுட் சாலை உரிமைகள். மேற்குறிப்பிட்ட மனைகளில் எந்த ஒரு கட்டிடமும் இல்லை. மேற்குறிப்பிட்ட மனை சர்வே எண். 731/1 பகுதி மற்றும் சர்வே எண். 731/2 பகுதி-க்குட்பட்டது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	30.01.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
2	45389420001131	1) திரு. விஜயபாஸ்கர் குண்டேகலா, மேலும் : M/s. GCC Services India Pvt. Ltd. & 2) திருமதி. C வனஜாக்ஷி	25.07.2023	21.10.2023	ரூ.30,52,337.01 (ரூபாய் முப்பது இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து முன்னூற்றி முப்பத்தி ஏழு மற்றும் பைசா ஒன்று மட்டும்)	09.02.2024 நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.19,63,000/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரம் மட்டும்)	ரூ.1,96,300/- (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரத்து முன்னூறு மட்டும்)	19.02.2024 @ மாலை 02.00 மணி	17.02.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், தலைமை அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

அடமான சொத்தின் விவரம் : கெம்பட்டி கிராமம், தேன்கனிகோட்டை தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் கீலமங்களம் சார் பதிவு மாவட்டம் மற்றும் கெம்பட்டி கிராமம் பஞ்சாயத்து எல்லைகள் மற்றும் தால்லி யூனியன் கவுன்சில். கெம்பட்டி கிராமம் சர்வே எண். 731, Dry Ext. Hec. 1.54.0, Asst. Rs.0.94np, தற்போது மேலும் துணை பிரிவு சர்வே எண். 731/1, Dry. Ext. Hec. 0.95.5 (or) Ac. 2.36 cents, Asst. Rs.0.59np, சர்வே எண். 731/2, Dry. Ext. Hec. 0.58.5 (or) Ac. 1.44 cents, Asst. Rs.0.35np. மேற்குறிப்பிட்ட இரண்டு சர்வே எண்கள் பரப்பு ஏக்கர் 3.80 சென்ட்ஸ். நிலங்கள் "ஆஷிர்வாத் அம்பாரா பேஸ்-3" என்ற பெயரில் ஒப்புதல் லேஅவுட்டாக மாற்றப்பட்டு பல வீட்டு சைட்டுகளாக பிரிக்கப்பட்டது, ஒப்புதல் வழங்கியது துணை இயக்குநர், நகரம் மற்றும் நாடு திட்டம் அங்கீகாரம், ஒப்புதல் எண். 16/2008, இதில் மனை எண்.01. பரப்பு 2500 சதுர அடி, மற்றும் பின்வரும் **எல்லைகள்: கிழக்கில்:** பேஸ்-4, **மேற்கில்:** மனை எண்.2, **வடக்கில்:** பேஸ்-2 மற்றும் **தெற்கில்:** சாலை. இந்த எல்லைகளின் அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 50 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் : 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் : 50 அடி. மொத்த ஏரியா - 2500 சதுர அடி. மேற்குறிப்பிட்ட மனை சர்வே எண். 731/1 பகுதி மற்றும் சர்வே எண். 731/2 பகுதி-க்குட்பட்டது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	30.01.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
3	31688653213883	1) M/s. Manjunatha Tent House, 2) திரு. V மஞ்சுநாதா, உரிமையாளர் M/s. Manjunatha Tent House, 3) திரு. V வெங்கட்சாமி	20.02.2020	23.09.2021	ரூ.13,86,990.05 (ரூபாய் பதிமூன்று இலட்சத்து எண்பத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மற்றும் பைசா ஐந்து மட்டும்)	19.02.2024 நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.11,88,000/- (ரூபாய் பதினொரு இலட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்)	ரூ.1,18,800/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினெட்டாயிரத்து எண்ணூறு மட்டும்)	05.03.2024 @ மாலை 02.00 மணி	04.03.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், தலைமை அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

அடமான சொத்தின் விவரம் : அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், மதிகிரி கிராமம், ஓசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கீழமங்களம் சார்-பதிவு மாவட்டம், மதிகிரி கிராமம், சர்வே எண். 162 (ஒரு நூறு மற்றும் அறுபத்தி இரண்டு), வறண்ட பரப்பு Hec. 0.96.0, Asst. Rs.4.74, இந்த நிலம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டது, இதில் மனை எண்.63, அளவுகள் கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 37 அடி மற்றும் தெற்கு பக்கம் : 35 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 20 அடி மற்றும் மேற்கு பக்கம் : 20 அடி, அனைத்து பரப்பளவு 720 சதுர அடி மற்றும் பின்வரும் **எல்லைகள்: கிழக்கில்:** 20 அடி அகல லேஅவுட் சாலை, **மேற்கில்:** சர்வே எண்.161, **வடக்கில்:** மனை எண்.22, **தெற்கில்:** மனை எண்.9.

மின் ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு" என்ற அடிப்படையில் "ஆன்லைனில்" நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் M/s. 4 Closure இணையதளம் https://bankauctions.in & www.foreclosureindia.com மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு M/s. 4 Closure, தொடர்பு திரு.பாஸ்கர் நாயுடு, தொடர்பு எண். 8142000809/8142000061. Email id: info@bankauctions.in / subbarao@bankauctions.in.

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 9590858249), திரு. உமேஷ் (மொபைல் எண்.8050149617) மற்றும் திருமதி. சைதா (மொபைல் எண். 7400445147) தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 02.02.2024, இடம் : கிருஷ்ணகிரி — Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by C.Sridhar at Plot No. 13-D, Bommasandra-Jigani Link Road, KIADB Industrial Area, Bommasandra, Anekal Taluk, Bengaluru -560099 on behalf of KSL MEDIA LIMITED, Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).